1970 ஆகஸ்ட் 29]

Conference of State Ministers for Social Welfare

* 119 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether representatives from this State attended the meeting of State Minister for Social Welfare at Delhi about 29th January 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) அரிசன நலத்துறை அமைச்சரும், பின்னிலை வகுப்பினர் அமைச்சரும் 29—1—1970 நாளன்று, டில்லியில் நடந்த மாநில அமைச்சர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்களுடன் கீழே சொல்லப்பட்ட அலுவலர்களும் கலந்து கொண்டார்கள் :—

1. திரு. எம். ஏ. ஷெரீப், ஐ.ஏ.எஸ்., முந்திய செயலாளர், சமூக நலத்துறை.

2. திரு. வி. கருப்பன், எம்.ஏ., கூட்டு நெறியாளர், அரிசன நலத்துறை.

3. திரு. இரா. குழந்தைவேலு, ஐ.ஏ.எஸ்., நெறியாளர், பின்னிலை வகுப்பினர் துறை.

4. டாக்டர் திருமதி ஜெயலஷ்மி, ஏ. ராவ், முந்திய நெறியாளர், மகளிர் நலத்துறை.

5. திரு. பி. என். வேதநாராயணன், ஐ.ஏ.எஸ்., நெறியாளர், வேலை வாய்ப்பு பயிற்சித்துறை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : நம் தமிழ்நாட்டிலிருந்து சென்ற பிரதிநிதிகள் என்னென்ன திட்டங்களை அங்கு எடுத்துக் கூறினர்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பொதுவாக தீண்டாமை நீக்கப்படுவதற்காக வேறு பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று ஏற்கனவே நிகழ்ச்சி நிரலில் குறிக்கப்பட்டிருந்ததை எவை எவைகளை அரசு ஏற்றுக்கொள்ள முடியுமோ அவற்றை ஏற்றுக்கொள்ளலாம் என்று மாநில அரசுச் சார்பில் எடுத்துக் கூறியிருக்கிறுர்கள். அதேபோல் மாநிலக் குழு ஒன்று அமைத்து தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபட வேண்டும் என்றும் கேட்கப் பட்டிருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்து பிறகு முடிவு கூறுகிறோம் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறுர்கள். இப்படிப் பட்ட முக்கியமான பிரச்னைகளுக்கு போதுமான நிதி ஒதுக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறது, வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் போன்றவற்றிற்கு. மத்திய அரசு இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக மாணவர்களுக்குத் தரப்படுகிற உபகாரச் சம்பளம் அதிகமாகத் தரப்படவேண்டும், விடுதிகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்படவேண்டும் என்பது போன்ற இவைகளுக் கெல்லாம் அதிகத் தொகை தரவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டு வந்திருக்கிறோம்.